சுற்றாடல் அமைச்சு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் (STC)

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்காக (STC)

**ஒருங்கிணைக்கப்பட்ட வர்த்தக நடைமுறை மறுசீரமைப்பு (BPR) மற்றும் நிறுவன வள திட்டமிடல் (ERP) ஒன்றின் வடிவமைப்பு, மேம்பாடு, செயற்படுத்தல், மற்றும் பராமரிப்பு**

பெறுகை இல. STC/PSM/2025/Pro-15

# அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்


இல. 82, "சம்பத் பாய", ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்லை.

தொ.: +9411-2866601 – 5 தொலைநகல்: +9411-2866623

மின்னஞ்சல்: managerps@timco.lk


2025 செப்டெம்பர் 03

## தகுதிபெற்ற IT தீர்வு சேவை வழங்குநர்களிடம் இருந்து ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு (EOI)

## அரசாங்க மரக்கூட்டுத்தாபனம் (STC)

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்காக (STC) ஒருங்கிணைக்கப்பட்ட வர்த்தக நடைமுறை மறுசீரமைப்பு (BPR) மற்றும் நிறுவன வள திட்டமிடல் (ERP) ஒன்றின் வடிவமைப்பு, மேம்பாடு, செயற்படுத்தல், மற்றும் பராமரிப்பு

**அறிமுகம்**

1. அரசாங்க மரக்கூட்டுத்தாபனம் (STC) 1957 இன் 49 ஆம் இலக்க அரச தொழில்துறை நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் 1968 ஏப்ரலில் நிறுவப்பட்டதோடு STC ஆனது காலப்போக்கில் பெற்ற அறிவு மற்றும் திறன் ஊடாக எமது வாடிக்கையாளர்களுக்காக Toto தயாரிப்பு மரப்பலகை மற்றும் மரப்பலகை சார்ந்த உற்பத்திகளுக்கான சிறந்த சேவையை வழங்கி இலங்கை தேசம் மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளுக்கு பங்களிப்புச் செய்கிறது.

2. தற்போதைய டிஜிட்டல் மயமாக்கப்பட்ட சூழலுடன் இணைந்ததாக, விரைவான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட, துல்லியமான ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவன வள திட்டமிடல் (ERP) தீர்வு ஒன்றில் கிடைக்கும் வசதி மற்றும் பரவலாக்கல் அவசியமாக உள்ளது. கொள்கை வகுப்பாளர்களின் பொருத்தமான முடிவை பெறுவது அதேபோன்று செலவை குறைத்தல் மற்றும் அரச நிறுவனங்கள் ஊடாக திருப்திகரமான சேவையை வழங்குவதற்கும் இது தீர்க்கமானதாக உள்ளது.

3. அதனால், மேலுள்ள ERP தேவையை பூர்த்தி செய்வதற்கு தகுதி பெற்ற IT ஆலோசனை நிபுணர்களின் உதவியை பெற STC தீர்மானித்துள்ளது.

**4. ERP தீர்வின் நோக்கங்கள்**

i. சிறந்த நடைமுறைகளுடன் செயற்திறன் மற்றும் சீரமைப்பை மேம்படுத்துவதற்காக STC இன் அனைத்து செயற்பாட்டு பகுதிகளில் தற்போதுள்ள வர்த்தகங்களை பகுப்பாய்வு செய்தல் மற்றும் மறுசீரமைத்தல்.

ii. STC இன் நடவடிக்கைகளை முழுமையாக ஒருங்கிணைக்க ERP தீர்வின் கட்டமைப்பு, விரிவாக்கல் மற்றும் பாதுகாப்பான வடிவமைப்பு, மேம்பாடு, மற்றும் செயற்படுத்தல்.

iii. ERP அமைப்பு நவீன, திறந்த தரநிலை தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மேம்படுத்தப்பட்டது மற்றும் இணையதளம் மற்றும் கைபேசி தளங்கள் மூலம் அணுக முடியுமாவதை உறுதி செய்தல்.

iv. 10 ஆண்டு காலத்திற்கு நீண்ட கால பராமரிப்பு, முறைமை இற்றைப்படுத்தல்கள் மற்றும் திறன் கட்டமைப்புக்கு உதவுதல்.

**5. தகைமை அளவுகோல்**

EOI இணை சமர்ப்பிப்பதற்கான அளவுகோலுக்கு, வெற்றிகரமான தகவல் அமைப்பு தீர்வு சேவை வழங்குநர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும். தகுதியுடைய தீர்வு வழங்குநர்களுக்கான தகைமை அளவுகோலில் பின்வருவன உள்ளடங்கும். (EOI அழைப்பு ஆவணங்களில் தரப்பட்ட தகைமை தேவைகளுக்கு மேலதிகமானது)

**a) பொதுவான அனுபவங்கள்**

i. இலங்கையில் சட்டரீதியாக நிறுவப்பட்ட தகுதி பெற்ற IT சேவைகள் வழங்குநர் ஒருவர் மூலம் ஆர்வ வெளிப்பாடு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

ii. முன்மொழியப்பட்ட IS தீர்வு சேவை வழங்குநர் இலங்கை அல்லது வெளிநாடுகளில் தனிப்பயன் மென்பொருள் தீர்வுகளை மேம்படுத்தியதில் கடந்த பத்து (10) ஆண்டுகளுக்குள் குறைந்தது ஏழு (7) ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**b) இதனையொத்த பண்புடைய ஒப்பந்தத்தில் பிரத்தியேக அனுபவம்:**

i. IS தீர்வு வழங்குநர் அமைப்பின் செயற்படுத்தலுடன் இணைந்து வர்த்தக நடைமுறை மறுசீரமைப்புடன் (BPR) தொடர்புபட்டு கடந்த பத்து (10) ஆண்டு காலத்தில் குறைந்தது இரண்டு (2) ஒப்பந்தங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

ii. தீர்வு வழங்குநர் குறிப்பு கடிதங்கள் மூலம் ஆதரவான, குறைந்தது இரண்டு (02) அமைப்பு செயற்படுத்தல் திட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு திட்டத்தின் குறைந்தபட்ச பெறுமதி நாற்பது (40) மில்லியன் இ.ரூபாவுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதோடு விலைமனு சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கடந்த பத்து (10) ஆண்டுகளுக்குள் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**c) சராசரி ஆண்டு புரள்வு மற்றும் நிதி வளங்கள்**

கடந்த ஐந்து (5) ஆண்டுகளில் நிறுவனத்தின் சராசரி ஆண்டு புரள்வு எழுபத்து ஐந்து (75) மில்லியன் இ. ரூபாவுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதோடு சராசரி செயற்பாட்டு மூலதனம் (தற்போதைய சொத்துக்கள் - தற்போதைய பொறுப்புகள்) கடந்த ஐந்து (5) ஆண்டுகளில் பன்னிரண்டு (12) மில்லியன் இ. ரூபா இருத்தல் வேண்டும்.

**d) தரம் மற்றும் பாதுகாப்பு தேவைகள்**

iii. விலைமனுதாரர் ISO 9001:2015 and ISO 27001 சான்றளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**6. ஆர்வ வெளிப்பாட்டை சமர்ப்பிப்பதற்கான நடைமுறை.**

பத்தரமுல்லை, ரஜமல்வத்த, 'சம்பத் பாயா', இல. 82, அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தில் இருந்து அலுவலக நேரங்களில் 2025 செப்டெம்பர் 03 ஆம் திகதி தொடக்கம் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை 12,500.00 இ. ரூபாவை செலுத்தி ஆர்வமுடைய ஆலோசனை நிறுவனங்களால் ஆங்கிலத்திலான EOI ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்ய முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட EOI இனை 2025 ஒக்டோபர் 04 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த ஒப்படை தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் 0772361513 இல் முகாமையாளர் (IT) இடமிருந்து பெற முடியும்.

**தலைவர்**
**அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்**